1987 நவம்பர் 10]

களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதால் நடப்பு நிதி யாண்டிலே புதிதாக விடுதிகளைக் கட்ட நடவடிக்கை எடுக்கப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

பெருந்துறைத் தொகுதியில் முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவு மையங்கள்.

24—(* வினா எண் 14159) டாக்டர் அ. பொன்னுசாமி மற்றும் திரு. யு. பி. மாதையன்: மாண்புமிகு சத்துணவு, சமூக நலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறைத் தொகுதியில் எத்தனை இடங்களில் முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவு மையங்கள் நடைபெறு கின்றன?

(ஆ) எத்தனை இடங்களில் கட்டிடங்கள் கட்டப்பட் டுள்ளன?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: தலைவர் அவர்களே, (அ) பெருந்துறை தொகுதியில் மொத்தம் 301 மையங் கள் நடைபெறுகின்றன.

(ஆ) இவற்றில் 122 இடங்களில் கட்டிடங்கள் கட்டப்பட் டுள்ளன.

டாக்டர் அ. பொன்னுசாமி: பெருமைபெற்ற பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் பல கட்டடங்கள் கட்ட வேண்டு மென்று அமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அவற்றை விரைவாகக் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதையும், உலகெலாம் போற்றுகிற மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர் களுடைய சத்துணவுக் கூடங்களில் உள்ள குழந்தைகளுக்கு ஹெல்த் கார்டு நல்ல முறையில் பராமரிக்கப்படுகிறதா என்பதை யும், டாக்டர்களோ அல்லது விசிட்டர்களோ அங்கே பீரியாடிக்க லாக செக் அப் செய்கிறார்களா என்பதையும் அந்தத் திட்ட மானது கர்ப்பிணிப் பெண்களுக்கும் விஸ்தரிக்கப்படுமா என்பதையும் அங்கே கல்வியின் தரம் உயர்ந்துள்ளதா என்பதை

யும் அறிவிப்பதோடு விறகுக்கான பணம் பற்றவில்லை என்ற குறையைப் போக்குவதற்கும் அரசு முன்வருமா என்பதையும் . . . (மணியடிக்கப்பெற்றது).

(முற்பகல் 10-50)

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் நிதிநிலைக்கு ஏற்ப அவ்வப்போது கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இப்போது நம்முடைய சத்துணவுக் கூடங்களில் ஹெல்த் கார்டுகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக ஐ.சி.டி.எஸ். திட்டம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் ஆகியவை செயல்படுகின்ற இடங்களிலேயும், நம்முடைய முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவு மையங்களிலேயும் தற்போது இந்த ஹெல்த் கார்டுகள் சிஸ்டம் பராமரிக்கப்பட்டு வருகின்றன. ஆங்காங்கு இருக்கிற மருத்துவர்கள் அந்தக் குழந்தைகளைப் போய்ப் பார்த்து, அங்கு இருக்கிற நம்முடைய நலப் பணியாளர்கள் மூலமாக அவர்களுடைய அன்றாட, அந்தந்த வாரங்களில் அந்தந்த மாதங்களில் ஏற்படுகின்ற மாற்றங்களை அந்த நல அட்டைகளிலே குறிப்பிடுகிறார்கள். உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அது போலவே கல்விக் கூடங்களிலேயும் கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கான வழி வகைகளை மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்கள் எடுத்து வருகிறார்கள்.

டாக்டர் அ. பொன்னுசாமி: பெருமை பெற்ற பேரவையின் தலைவர் அவர்களே, இந்தக் கூடங்கள் சத்துணவுக் கூடங்களாக விளங்கி வருகின்ற காரணத்தாலே, சாதாரண மக்களுக்கும் சகல சத்துக்களையும் தருகின்ற முருங்கை மரங்களை இதுபோன்ற சத்துணவுக் கூடங்களிலே வளர்ப்பதற்கு அரசு முன்வருமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாவிதமான மரங்களையும் வளர்க்க வேண்டும் என்றுதான் அரசு சொல்லி வருகிறது. சத்துணவுக் கூடங்களைச் சுற்றியும் இன்றைக்கு கீரைகளை வளர்ப்பதற்கும், காய்கறிகளை வளர்ப்பதற்கும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்